# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

## Tamil Study Centre, Homebush Inc.

**Postal Address: P O Box 4019, Homebush NSW 2140**

www.tsch.org.au info@tsch.org.au


# அரையாண்டுப் பரீட்சை 2019

**ஆண்டு: 9** **திகதி: 22/06/2019**

**நேரம்: 2½ மணித்தியாலங்கள்**

**ஆசிரியர்: திரு ச தேவராசா**

**மாணவர் பெயர்:** ______________________________

| வினாக்கள் | புள்ளிகள் |
|---|---|
| வினா 1 | |
| வினா 2 | |
| வினா 3 | |
| வினா 4 | |
| வினா 5 | |
| வினா 6 | |
| மொத்தப் புள்ளிகள் | |

| வினா இல | 1 | புள்ளிகள் | 15 | பக்கம் | 2 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் சொற்களைப் பயன்படுத்தி ஆறு சொற்களுக்குக் குறையாத வாக்கியங்கள் எழுதுக.** (15 புள்ளிகள்)

1. வணக்கம்

______________________________

______________________________

2. தமிழ் மொழி

______________________________

______________________________

3. தமிழ்ப் பாடசாலை

______________________________

______________________________

4. குளிர் காலம்

______________________________

______________________________

5. மலர்கள்

______________________________

______________________________

6. விளையாடினேன்

______________________________

______________________________

7. வருவாய்

______________________________

______________________________

8. நடித்தார்கள்

9. கூவுகின்றது

10. பாடுவேன்

11. விண்மீன்கள்

12. கிழக்குத் திசை

13. சிற்பங்கள்

14. சிரித்தாள்

15. எழுதுகின்றான்

| வினா இல | 2 | புள்ளிகள் | 15 | பக்கம் | 4 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் உரைப்பகுதியை வாசித்து கீழே உள்ள வினாக்களுக்கு விடை எழுதுக**

நான்கு பக்கங்களிலும் கடலால் சூழப்பட்ட ஒரு நிலப்பரப்பு தீவு எனப்படும். ஐக்கிய இராச்சியம் (United Kingdom) சப்பாத்து வடிவத்தில் அமைந்த ஒரு தீவாகும். சுமார் 270 வருடங்களுக்கு முன்பு ஆங்கிலேயர்கள் இலங்கை, இந்தியா, சீனா போன்ற பல நாடுகளைக் கைப்பற்றி, அந்தநாடுகளில் ஆட்சி செய்து அந்த நாடுகளின் வளங்களை தமது நாட்டிற்கு அள்ளிச்சென்றனர். இதனால் சூரியன் அஸ்தமிக்காத இராச்சியம் என்ற பெயரை அக்காலத்தில் ஐக்கிய இராச்சியம் பெற்றிருந்தது. பலம் வாய்ந்த கடற்படையை வைத்திருந்தமையால் வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, ஆசியா, ஆபிரிக்காக் கண்டங்களில் ஸ்பானியர், போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் போன்றோர் ஆட்சி செலுத்திய பல்வேறு குடியேற்ற நாடுகளை ஆங்கிலேயர் கைப்பற்றினர்.

ஆங்கிலேயரான கப்டன் குக் 1770 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவுக்கு வந்தார். அன்றிலிருந்து அவுஸ்திரேலியாவும் ஆங்கிலேயர் வசமாயிற்று. பெருமளவு ஆங்கிலேயர்கள் அவுஸ்திரேலியாவில் குடியேறினர். முன்பு ஏனைய உலக மக்களுடன் தொடர்பு கொள்ள முடியாத நாகரீகம் அடையாத பூர்வீக குடிகளே அவுஸ்திரேலியாவில் வாழ்ந்தனர். காலப் போக்கில் குடியேற்ற நாட்டு மக்கள் ஆங்கிலேயருக்கு எதிராக போராட்டம் நடத்தியமையால் ஆங்கிலேயர்கள் அந்த நாடுகளிலிருந்து வெளியேறினர். அந்த நாடுகள் சுதந்திர நாடாக தம்மைத் தாமே ஆட்சி செய்யும் நிலையைப் பெற்றன. இந்த வகையில் 1947 ஆம் ஆண்டில் இந்தியாவும், 1948 ஆம் ஆண்டில் இலங்கையும் சுதந்திரம் பெற்றன.

ஐக்கிய இராச்சியத்தை ஏனைய ஐரோப்பிய நாடுகளிலிருந்து பிரிக்கின்ற கடல் ஆங்கிலக் கால்வாய் என்றழைக்கப்படுகின்றது. இந்த வகையில் ஆங்கிலக் கால்வாயின் ஒரு கரையில் ஐக்கிய இராச்சியமும், மறுகரையில் பிரான்சும் அமைந்துள்ளது. இரு நாடுகளுக்குமிடையிலான போக்குவரத்தை இலகுவாக்க கடலுக்கடியில் குகை (Tunnel) அமைக்கப்பட்டு தொடருந்து, பேருந்து போன்ற வாகனங்களில் மக்கள் பிரயாணம் செய்வது வியப்புக்குரிய சாதனையாக விளங்குகின்றது. முன்பு ஐக்கிய இராச்சியமும் ஐரோப்பிய ஒன்றியத்தில் (European Union) அங்கம் வகித்தமையால் இரண்டு எல்லைகளிலும் கெடுபிடிகள் இல்லாமல் இருந்தன. ஆனால் அண்மையில் ஐக்கிய இராச்சியம் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து விலகுவதாக முடிவெடுத்த பின்பு பிரித்தானிய எல்லைக் காவலர்களும், பிரான்ஸ் எல்லைக்காவலர்களும் கடுமையான நடைமுறைகளைப் பின்பற்றுகின்றனர். இதனால் பயணிகள் அசௌகரியத்திற்கு ஆளாகின்றனர்.

1. தீவு என்றால் என்ன? தீவாக அமைந்துள்ள இரண்டு நாடுகளை எழுதுக.

(2 புள்ளிகள்)

2. சூரியன் அஸ்தமிக்காத சாம்ராச்சியம் என்ற பெயரை ஐக்கிய இராச்சியம் பெற்றிருந்தமைக்கான காரணம் என்ன? (2 புள்ளிகள்)

3. ஆங்கிலேயருக்கு முன்பு நாடுகளைக் கைப்பற்றி தமது குடியேற்ற நாடுகளாக வைத்திருந்தவர்கள் யாவர்? (2 புள்ளிகள்)

4. அவுஸ்திரேலியாவுக்கு ஆங்கிலேயர் வருகைதராமல் இருந்திருந்தால் அவுஸ்திரேலியா எந்த நிலையில் இருந்திருக்கும் என்பது பற்றிய உங்கள் கருத்தைச் சுருக்கமாக எழுதுக. (5 புள்ளிகள்)

5. பிரான்சுக்கும், பிரித்தானியாவுக்கும் இடையில் கடலுக்கு அடியில் அமைக்கப்பட்ட குகை ஏன் ஆச்சரியமான சாதனையாகப் பார்க்கப்படுகிறது? (4 புள்ளிகள்)

| வினா இல | 3 | புள்ளிகள் | 15 | பக்கம் | 6 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் விடயத்தை 70 சொற்களுக்குக் குறையாமல் தொடர்ந்து எழுதி நிறைவு செய்க** (15 புள்ளிகள்)

ஒரு நாள் சூரியன் மேற்குத் திசையில் மறைந்தான். குளிர்காலம் ஆதலால் ஐந்து மணிக்கே இருள் சூழத் தொடங்கியது. நான் வீதி வழியாக நடந்து சென்று கொண்டிருந்தேன். அப்போது வீதியோரத்தில் வாகனங்கள் நிறுத்தப்படும் இடத்தில் ஒரு அழகான புதிய கைப்பை இருந்தது. தற்போது எதிர்பாராத இடங்களில் எதிர்பாராத நேரத்தில் குண்டுகள் வெடிப்பதால் பெண்கள் கொண்டு செல்லும் இந்தக் கைப்பையில் யாராவது குண்டு வைத்திருப்பார்களோ? என்று எண்ணித் தயங்கினேன். அப்படி இருக்காது என்று என்னை நானே சமாதானப்படுத்திக் கொண்டேன். தைரியத்தை வரவழைத்துக்கொண்டேன். கைப்பையை எடுத்து திறந்து பார்த்தேன். எனது இரு கண்களும் ஆச்சரியத்தால் அகல விரிந்தன. அதற்குக்காரணம் கைப்பையில் ஏராளமான தங்க, வைர நகைகள் இருந்தமையே ஆகும், என்ன செய்வது என்று யோசித்தேன்.

| வினா இல | 4 | புள்ளிகள் | 15 | பக்கம் | 8 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் தொடர் வாக்கியத்திலிருந்து 15 தனிவாக்கியங்களைத் தெரிவு செய்து எழுதுக.** (15 புள்ளிகள்)

நான் கடந்த சனிக்கிழமை தமிழ்ப்பாடசாலைக்கு வந்தபின்பு தமிழ் மொழியை நன்றாகக் கற்ற பிறகு வீட்டிற்கு நடந்து சென்று மதிய உணவாக சோறும், கறியும் உண்டதைத் தொடர்ந்து இன்று மாலை ஆறு மணிக் காட்சிக்கு விசுவாசம் படம் பார்க்கப் போவோமா? என்று கேட்டபோது அப்பாவும், அம்மாவும் சம்மதம் தெரிவித்தமையால் நானும், தங்கையும் மகிழ்ச்சியடைந்து இணையத்தளத்தில் எங்களுக்கான நான்கு அனுமதிச்சீட்டுக்களைப் பெற்றுக்கொண்டு நேரம் ஐந்து மணியானதும் அப்பாவின் வாகனத்தில் ஏறிப்பேராவலுடன் திரையரங்கத்துக்கு சென்றதுடன் விசுவாசம் தமிழ்த் திரைப்படத்தைப் பார்த்த பின்பு மீண்டும் அப்பாவின் வாகனத்தில் ஏறி இந்திய உணவகத்தில் இரவு உணவை உண்டதைத் தொடர்ந்து இரவு பத்து மணிக்கு வீட்டை அடைந்தோம்.

| வினா இல | 5 | புள்ளிகள் | 20 | பக்கம் | 10 |
|---|---|---|---|---|---|

உங்களுடைய மாமா குடும்பத்துடன் இலங்கை அல்லது இந்தியாவில் வசிக்கிறார். அவர் அங்கே விளையாட்டுத்துறையில் உயர் பதவி வகிக்கின்றார்.

சிட்னியில் 2020 ஆம் ஆண்டில் ஒலிம்பிக் விளையாட்டுக்கள் நடைபெறவுள்ளதாகக் கருதிக்கொள்ளுங்கள்.

நீங்கள் சிட்னியில் ஐந்து அறைகளைக் கொண்ட சொந்த வீட்டில் வசிக்கிறீர்கள்.

மேலே தரப்பட்ட விடயங்களை அடிப்படையாக வைத்து உங்களின் மாமா குடும்பத்தினரை அவுஸ்திரேலியாவிற்கு வருகை தந்து ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியை பார்த்து மகிழ்ந்து செல்லுமாறு 100 சொற்களுக்கு குறையாமல் ஒரு கடிதம் எழுதுக.

(20 புள்ளிகள்)

| வினா இல | 6 | புள்ளிகள் | 20 | பக்கம் | 12 |
|---|---|---|---|---|---|

**பின்வருவனவற்றில் ஒன்றைப்பற்றி 150 சொற்களுக்குக் குறையாமல் எழுதுக.**

1. நான் கண்ட மகிழ்ச்சியான கனவு
2. முகநூல், டுவிட்டர் போன்ற சமூக ஊடகங்களினால் ஏற்படும் நன்மைகளும் தீமைகளும்
3. கீழே தரப்பட்ட விடயங்களை அடிப்படையாக வைத்து “சுத்தம் சுகம் தரும்” என்ற தலையங்கத்தில் ஒரு கட்டுரை எழுதுக.
    - நாம் தினமும் குளித்து எமது உடலைச் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும்.
    - அதேபோல் நாம் வாழ்கின்ற வீட்டைக் கூட்டித் துப்பரவாக்கி சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.
    - அதே வேளையில் நாம் வாழ்கின்ற நாட்டையும் அசுத்தப்படுத்தாமல் சுத்தமாக வைத்திருக்கக் கூடிய வகையில் எமது செயற்பாடுகள் அமைய வேண்டும்